# நுழைவாயில்

ஐயப்ப வழிபாடு கேரள மண்ணில் தழைத்த ஒரு பாரதப் பண்பாட்டு இனிமை; சநாதன தர்மத்தின் அனைத்து அழகுகளையும், நுட்பங்களையும் பொது மக்கள் மனதில் விதைத்து வளர்க்கும் ஓர் உன்னதமான ஆன்மீக நாற்றங்கால்.

ஸ்ரீ ஐயப்பனைத் தரிசனம் செய்ய ஆண்டுதோறும் இலட்சக் கணக்கானவர்கள் சபரிமலைக்கு யாத்திரை மேற்கொள்கிறார்கள். யாத்திரையின் முன்பு பக்தர்கள் மேற்கொள்ளும் விரதம் ஒரு துறவுப் பயிலரங்கம் (workshop). எவ்வித வேறுபாடுமின்றி அனைவரும் சிரத்தையோடு மேற்கொள்ளும் பயிற்சி இது. புலனடக்கம், அனைத்திலும் தெய்வீகம் காணல், அகமுகப் பயணம் என்பன விரத நோக்கங்கள். குருசாமியின் துணையுடன் இருமுடி கட்டுதல் ஓர் ஆனந்த அனுபவம். இந்தப் பக்திச் செயல்பாட்டுக்கு ஒரு ஞான முகமும் உண்டு.

சபரிமலை யாத்திரையின் வழி நடைப்பயணம் வாழ்க்கையின் ஓர் அற்புத அனுபவம். சரணகோஷமும், கூட்டு வழிபாட்டின் பயன்களும், லௌகீக அதிர்வுகள் தளர்ந்து ஆன்மீக அதிர்வுகளின் வயப்படுதலும் மிக இயல்பாக நிகழ்கின்றன. மூன்று வழித்தடங்களில் வரும் பக்தர்களும் பம்பை நதி தீரத்தில் சந்தித்து, அலைஅலையாகப் பக்தி ததும்பும் உள்ளங்களுடன் சந்நிதி நோக்கிச் செல்லுதல் ஓர் அரிய அனுபவம். அப்பெரும் பக்தர் கூட்டத்தில் ஒருவராகப் பங்கேற்றுச் செல்லுதல் வாழ்க்கையின் நல்வாய்ப்புகளில் ஒன்று. பொன்னு பதினெட்டாம்படியில் இருமுடி சுமந்து ஏறும் பாதங்களின் விரைவில்; ‘கரையா மனக்கல்லும் கரைந்து, கலந்து கொளற்கு விரையும்’ மன எழுச்சியைக் காணலாம். அனைத்துக்கும் சிகரமாக விளங்கும் சந்நிதானத்தில் பெறும் அபிஷேக தரிசனம் பரவசத்தின் ஆழத்தில் பரிபூரணத்துவத்தின் சுவையினை நல்குகிறது.

ஐயப்ப வரலாறு, விரதம், யாத்திரை, தரிசனம் என்னும் தொடர்நிலைப் பார்வைக்கு வேறுபட்டது இந்நூல் வழங்கும் பார்வை. சுவாமி ஐயப்பனை மையமாகக் கொண்டு சுழலும் அனைத்து விஷயங்களும் இங்கு ஐயனை அணுகும் வாசல்களே. ஐயப்ப உலகின் அனைத்து ‘விஷய வாசல்’களையும் அகர வரிசையில் தருவதற்கு இக்கையேடு முயல்கிறது. எனவே இது ஓர் ஐயப்பன்-களஞ்சியம்; பாதுகாத்துப் பேணுதற்குரிய களஞ்சியம். அவ்வப்போது நுழைந்து ஆன்ம லாபம் பெறுதற்குரிய ஆன்மீகக் களஞ்சியம்.

**ஸ்ரீ ஐயப்பன் காயத்ரி மந்திரம்:**

ஸ்ரீ பூதநாதாய
வித்மஹே
பவபுத்ராய
தீமஹி
தந்தோ
சாஸ்தா:
ப்ரசோதயாத்

## அ

### அகத்தியர்

புராண உலகம் போற்றும் தவ சீலர் அகத்தியர். தெய்வீக உலகின் ஒளியினை மானுட உலகம் தழைக்க அருளும் மாமுனிவர். காலாதீத ஞான சுரபி.

புலிப்பால் கொணரச் சென்ற மணிகண்டன் கானகத்துப் புலிகளோடு நாடு மீண்டான். அரசனும் பிறரும் அதிசயித்தனர். அப்போது அகத்தியர் பந்தள மன்னனின் அரண்மனை வந்து, ஹரிஹர சுதனான தர்மசாஸ்தாவே மணிகண்டனாக அவதரித்ததை உணர்த்தினார். அனைவரும் பரவசம் எய்தினர்.

### அகந்தை நீக்கம்

அகந்தை ஆன்ம சாதகனைச் சிறைப்படுத்துகின்றது; அகந்தை நீக்கம் பிரக்ஞை விரிவு தருகின்றது;